LIBRARY
21 ...
EASTERN UNIVERSITY, SRI LANKA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி – 1 (2012 /2013) (ஆகஸ்ட் 2017)

## (வெளிவாரி – மீள்பரீட்சை)

## TL 201 தமிழ் மொழியின் இலக்கணம்

நேரம்: 03 மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தது இரு வினாக்களையேனும் தெரிவுசெய்து மொத்தம் *ஐந்து* வினாக்களுக்கு விடை தருக

---

### பகுதி – 1

1. அ. தமிழ் எழுத்துக்களின் வரிவடிவம் குறித்து நன்னூலார் யாது கூறுகின்றார்? (05 புள்ளிகள்)

   ஆ. தமிழ் எழுத்துக்களின் வரிவடிவங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து விளக்குக. (15 புள்ளிகள்)

2. தமிழில் மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் பற்றி நன்னூலார் குறிப்பிடுவனவற்றை விளக்கி, தற்கால வழக்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தெளிவுறுத்துக. (20 புள்ளிகள்)

3. தமிழ்ச் சொல்லாக்கத்தில் ‘விகுதி’ பெறும் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக. (20 புள்ளிகள்)

4. அ. புணர்ச்சியாவது யாது? (05 புள்ளிகள்)

   ஆ. மையீற்றுப் புணர்ச்சியினை உதாரணங்களுடன் விளக்குக. (15புள்ளிகள்)

### பகுதி ii

1. அ. திசைச்சொல் பற்றி நன்னூல் கூறுவனவற்றைக் குறிப்பிடுக. (05புள்ளிகள்)

   ஆ. தமிழில் பிறமொழிக் கலப்பு குறித்துக் கருத்துரைக்குக. (15புள்ளிகள்)

2. அ. நன்னூலார் கூறும் இடைச் சொற்களின் பொருள்கள் யாவை? (05புள்ளிகள்)

   ஆ. தற்கால வழக்கில் இவ்விடைச்சொற்களின் பொருத்தப்பாடு குறித்து விபரிக்குக. (15புள்ளிகள்)

3. தொகைநிலைத் தொடர்மொழிகளின் வகைப்பாடுகளை எடுத்துக் காட்டி அவற்றின் தற்காலப் பயன்பாடு பற்றி விபரிக்குக. (20புள்ளிகள்)

4. அ. தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என்பவற்றை விளக்குக. (05புள்ளிகள்)

ஆ. பால், இட அடிப்படையிலான வினைமுற்றுக்களை உதாரணங்களுடன் எடுத்துக் காட்டுக. (15புள்ளிகள்)